# முன்னாள் தலைமைத் தேர்தல் ஆணையர் நவீன் சாவ்லா மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, பிப்.3-

முன்னாள் தலைமைத் தேர்தல் ஆணையர் நவீன் சாவ்லா அவர்களின் மறைவையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

முன்னாள் தலைமைத் தேர்தல் ஆணையர் நவீன் பி.சாவ்லா அவர்களின் மறைவு செய்தி அறிந்து மிகுந்த வருத்தமுற்றேன்.

இந்தியாவின் தேர்தல் முறையை வலுப்படுத்துவதில் அவரது பதவிக் காலம் குறிப்பிடத்தக்க பங்களிப்பை கண்டது. அவரது குடும்பத்தினருக்கும் அன்புக்குரியவர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப்பதிவில் இரங்கல் தெரிவித்துள்ளார்.

### அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் பயிலும்

# பிற்படுத்தப்பட்ட - மிகவும் பிற்படுத்தப்பட்ட - சீர்மரபினர் மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை!

## உதவி பெறுவதற்கான நிபந்தனைகள் – பிற்படுத்தப்பட்டோர் நல முதன்மைச் செயலர் அறிவிப்பு!

சென்னை, பிப்.3-

பிற்படுத்தப்பட்டோர் நல முதன்மைச் செயலர் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:-

அரசு, அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்கள் மற்றும் தனியார் தொழிற் கல்லூரிகளில் அரசு ஒதுக்கீட்டின் கீழ் பயிலும் பிற்படுத்தப்பட்ட (பி.வ), மிகப்பிற்படுத்தப்பட்ட(மி.பி.வ) மற்றும் சீர்மரபினர் (சீ.ம) மாணவ/ மாணவியருக்கு பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகை (PM YASASVI Postmatric Scholarship) திட்டம் கீழ்க்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் பிற்படுத்தப்பட் டோர், மிகப்பிற்படுத்தப் பட்டோர் (ம) சிறு பான்மையினர் நலத்துறை மூலம் வருடந்தோறும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

I. அரசு மற்றும் அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மூன்றாண்டு இளங்கலை பட்டப்படிப்பு பயிலும் பி.வ/மி.பி.வ/சீ.ம மாணவ/மாணவியருக்கு எவ்வித வருமான வரம்பு நிபந்தனையுமின்றி கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது.

II. முதுகலை, பாலிடெக்னிக், தொழிற்படிப்பு போன்ற பிற படிப்பு அரசு ஒதுக்கீட்டின் கீழ் பயிலும் மாணாக்கர்களுக்கு பெற்றோரது ஆண்டு வருமானம் ரூ.2,50,000/க்கு மிகாமல் இருத்தல் வே0ண்டும்.

2) 2024-2025ஆம் கல்வியாண்டில் மேற்படி கல்வி உதவித்தொகை திட்டத்திற்கான விண்ணப்பங்கள், University Management Information System (UMIS) (https://umis.tn.gov.in/) என்ற இணையதளம் மூலம் வரவேற்க செயல்பாட்டிற்கு வந்து உள்ளது. கல்வி உதவித்தொகைக்கு, மாணாக்கர்கள் உடனடியாக விண்ணப்பிக்கலாம் எனவும், கல்வி உதவித் தொகை விண்ணப்பம் சமர்ப்பிக்க கடைசி நாள்: 28.02.2025 ஆகும்.

அ) புதுப்பித்தல் மாணாக்கர் :

(Renewal Students i.e. 2nd, 3rd & 4th Year in the year 2024-25)

ஏற்கனவே, கல்லூரியில் கல்வி உதவிதொகை பெற்று 2024-25 ஆம் ஆண்டில் 2, 3 (ம) 4 ஆம் ஆண்டு பயின்று வரும் புதுப்பித்தல் மாணாக்கர்கள், கல்வி உதவித் தொகைக்கு புதிதாக விண்ணப்பிக்க வேண்டிய அவசியமில்லை. அம்மாணாக்கர்களுக்கு கல்லூரிகளில் நடப்பாண்டில் கல்வி பயில்வதை, சம்மந்தப்பட்ட கல்லூரிகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டு கல்வி உதவித் தொகை வழங்கப்படும்.

ஆ) புதிய மாணாக்கர் :

(1st year student & the students who are not applied the scholarship during the year 2023-2024)

நடப்பு கல்வியாண்டில் (2024-2025) புதிதாக கல்வி உதவித்தொகை பெற கல்லூரியில் முதலாமாண்டு சேர்க்கை பெற்ற (ம) சென்ற வருடத்தில் கல்வி உதவித் தொகைக்கு விண்ணப்பிக்க தவறிய புதிய மாணாக்கர்கள், தற்போது தாங்கள் பயிலும் கல்லூரியில் கல்வி உதவித் தொகைக்கென உள்ள ஒருங்கிணைப்பு அலுவலரை (Nodal Officer) அணுகி, https://umis.tn.gov.in/ என்ற இணையதளத்தின் மூலம் கல்வி உதவித் தொகைக்கு விண்ணப்பிக்கலாம். முதல் தலைமுறை பட்டதாரி எனில் அதற்கான சான்றினை சமர்ப்பிக்க வேண்டும்.

3) மேற்படி, விவரங்களை மாணாக்கர்களுக்கு தெரிவித்து, BC, MBC,& DNC வகுப்பை சார்ந்த மாணாக்கர்களை, பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகைக்கு விண்ணப்பிக்கு மாறு கல்லூரி முதல்வர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

4) கல்வி உதவித் தொகை தொடர்பான சந்தேகங்களுக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரை, அலுவலக நேரங்களில் அணுகி தொடர்பு கொள்ளலாம் என கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இவ்வாறு பிற்படுத்தப்பட்டோர் நல முதன்மைச் செயலர் - ஆணையர் அறிவித்துள்ளார்.

### நாகை மாவட்டத்தில்

# பேரறிஞர் அண்ணா நினைவு நாள் அமைதி ஊர்வலம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் என். கௌதமன் அறிக்கை!



நாகை, பிப். 3 -

நாகை மாவட்ட தி.மு.க.சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 56 ஆம் ஆண்டு நினைவுநாளையொட்டி மாலை அணிவித்து மரியாதை செய்திட வேண்டும் என கழகத்தினருக்கு மாவட்டச் செயலாளர் என். கௌதமன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

காஞ்சி தந்த காவியத் தலைவர்,தன் பேச்சால், எழுத்தால், தமிழ் மக்களை ஒருங்கிணைத்து தமிழ் மக்களிடையே பேரெழுச்சியை உண்டாக்கிய மாமேதை, தமிழர்க்கென திராவிட முன்னேற்றக் கழகம் கண்ட மகத்தான தலைவர்.இவர் விதைத்திட்ட கொள்கைகள், கோட்பாடுகள் தழைத்தோங்கி, விருட்சமாகி இன்று தமிழன் என்கிற உணர்வு மேலோங்கி நிற்க செய்த மகத்தான தலைவர், கழகம் கண்ட காவிய தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்களின் 56ஆம் ஆண்டு நினைவு தினம், இன்று (பிப்ரவரி 3-திங்கட்கிழமை) காலை நாகை மாவட்டத்தில் உள்ள அனைத்து பேரறிஞர் அண்ணா சிலைகளுக்கும், ஒன்றிய, நகர, பேரூர் பகுதியில் உள்ள அனைத்து கிளைகள், வார்டுகள் தோறும் அண்ணா அவர்களின் திருவுருவப் படங்களுக்கும் மாலை அணிவித்து மரியாதை செய்திட வேண்டும்.

நாகையில் பாரதி மார்க்கெட் அருகே உள்ள அண்ணா சிலைக்கு மாவட்ட கழக அலுவலகத்தில் இருந்து என் தலைமையில் அமைதி பேரணி சென்று மாலை அணிந்து மரியாதை செலுத்தப்படும் அதைத்தொடர்ந்து நாகை புத்தூர் அண்ணா சிலைக்கும் மாலை அணிவித்து மரியாதை செலுத்திடும்.

இந்நிகழ்ச்சிகளில் மாநில, மாவட்ட கழக நிர்வாகி கள், தலைமைச் செயற்குழு, உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், பேரூர் கழக செயலாளர்கள், கழக நிர்வாகிகள், கழகமூத்த முன்னோடிகள், மாவட்ட நகர, ஒன்றிய, பேரூர் சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பின் முன்னாள் பிரதிநிதிகள் அவரவர் பகுதியில் அறிஞர் அண்ணாசிலைகளுக்கும், திருவுருவப் படங்களுக்கும் மாலை அணிவித்து மரியாதை செய்திட வேண்டும். இந்நிகழ்ச்சியில் கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, இலக்கிய அணி, தொண்டர் அணி, வழக்கறிஞரணி, விவசாய அணி, வர்த்தகரணி, சுற்றுச்சூழல் அணி, நெசவாளரணி, ஆதி திராவிட நலக்குழு, சிறுபான்மை நலப்பிரிவு மருத்துவரணி, பொறியாளரணி, விவசாய தொழிலாளரணி, மகளிர் தொண்டரணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, விளையாட்டு மேம்பாட்டு அணி, அமைப்புசாரா தொழிலாளர் அணி, தகவல் தொழில் நுட்ப பிரிவு, ஓட்டுநர் அணி, அயலக அணி மற்றும் பங்கேற்க வேண்டும். மேலும் ஒன்றிய நகர, நகர, பேரூர் செயலாளர்கள் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து நடத்திடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் நாகை மாவட்ட கழக செயலாளர் என் கௌதமன் கூறியுள்ளார்.



கோவை வடக்கு மாவட்டம், மேட்டுப்பாளையம் தொகுதி ஒன்னிபாளையம் கிராமத்தைச் சேர்ந்த கழக உடன்பிறப்பு சுமதி சண்முகம் புதல்வன் ஹேமந்த் பனிரெண்டாம் வகுப்பு படிக்கும் மாணவனுக்கு கோவை வடக்கு மாவட்ட கழக செயலாளர் தொண்டாமுத்தூர்.ரவி முன்னிலையில் கோவை மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர் எஸ்.எம்.டி. கவிதா கல்யாணசுந்தரம் மருத்துவச் செலவிற்கு ரூபாய் 50,000 வழங்கினார் உடன் மேட்டுப்பாளையம் தொகுதி பொறுப்பாளர் ஜெயக்குமார் , தலைமை செயற்குழு உறுப்பினர் டி.பி. சுப்பிரமணி ,காரமடை கிழக்கு ஒன்றிய செயலாளர் எஸ்.எம்.டி. கல்யாணசுந்தரம் சிறுமுகை பேரூர் கழக செயலாளர் எம்.ஆர். உதயகுமார்,குழந்தைவேல்,கல்பனா தண்டபாணி யு.சி. கோவை வடக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் தளபதி தியாகு,மாவட்ட மாணவரணி அமைப்பாளர் அந்தோணி, மாணவரணி ராஜ்திலக், ஒன்றிய துணை செயலாளர் ஆலயம் பாலு, கிளை செயலாளர்கள் பூபதி, சந்தோஷ் மற்றும் குமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க தமிழ்நாடு முழுவதும் தொடக்கப் பள்ளிகளின் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டு வருகின்றது. அதன் தொடர்ச்சியாக தஞ்சாவூர் தொகுதிக்குட்பட்ட நூற்றாண்டு கடந்த வல்லம் கிழக்கு மற்றும் மேற்கு ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகளின் நூற்றாண்டு விழா மற்றும் பள்ளி ஆண்டுவிழா தஞ்சாவூர் சட்டமன்ற உறுப்பினர் டி.கே.ஜி.நீலமேகம் தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் தோ.அருளாநந்தசாமி, பேரூராட்சி தலைவர் செல்வராணி கல்யாணசுந்தரம் ஊரக வட்டார கல்வி அலுவலர் சங்கீதா, செயல் அலுவலர் ராஜசேகர், பேரூர் கழக செயலாளர் டி.கே.எஸ்.ஜி.கல்யாண சுந்தரம், சிங்.அன்பழகன் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்தி பரிசுகளை வழங்கினார்கள்.

# திருத்துறைப்பூண்டியில் தெருமுனைப் பிரச்சாரம்!

திருவாரூர், பிப்.2–

திருவாரூர் மாவட்ட இலக்கிய அணியின் சார்பில்திருத்துறைப்பூண்டி நகரத்தில் தெருமுனை பிரச்சாரம் நடைபெற்றது. நகர செயலாளர் ஆர்.எஸ். பாண்டியனின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தலைமை கழக பேச்சாளர் சோம.இளங்கோவன் ,அணி அமைப்பாளர் புலவர் எண்கண்.ச.மணி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

கழக தலைவர், தமிழ்நாடு முதல்வர், திராவிட நாயகர் தளபதி அவர்களின் வழிகாட்டுதல்களின்படியும் , மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. ஆலோசனைகளின்படியும் திருவாரூர் மாவட்டஇலக்கிய அணியின் சார்பில் மாவட்டம் முழுவதும் உள்ள ஒன்றிய, நகர, பேரூர் பகுதிகளில் தெருமுனை பிரசார கூட்டங்கள் நடைபெற்று வருகிறது.


மண்ணின் மைந்தர் கலைஞர் அவர்களின் நூறாண்டு நிறைவு, திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள், துணை முதல்வர் உதயநிதி அவர்களின் பிறந்த நாள் ஆகியவற்றை முன்னெடுத்து நடைபெறும் இந்த பிரசாரம், திருத்துறைப்பூண்டி நகரப்பகுதியில் காமராஜர் சிலை அருகே நடைபெற்றது.

பிரசாரக்கூட்டத்திற்கு நகர செயலாளர் ஆர்.பாண்டியன் தலைமை ஏற்க திமுக பேச்சாளர் சோம.இளங்கோவன் பங்கேற்று சிறப்புரையாற்றினர்.

மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர் தங்க. குணசேகரன், நல்லாசிரியர் செல்லத்துரை,தெ. தியாகராஜன் ஆகியோரும் , பிரச்சார உரையாற்றினார் . மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர்கள் ஜாகிர் உசேன், பால.முத்து, சோமசுந்தரம் மற்றும் முன்னாள் ஒன்றிய செயலாளர் முகில் இராஜேந்திரன்,மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் சிக்கந்தர், ஐ.ஜி.எஸ். ஜாகிர்உசேன், ஓம்சக்தி.கண்ணன் அவைத்தலைவர் சிதம்பரம்,மாவட்ட பிரதிநிதிகள் சக்திவேல்,பன்னீர் செல்வம், பாலு, ஆர்.எஸ்.சுந்தர்,இளைஞர் அணி நகர அமைப்பாளர் வசந்த், இலக்கிய அணி அமைப்பாளர் துரை, காளிதாஸ், கவிஞர் உதயகுமார்,பாலசுந்தரம் மற்றும் மாநில, மாவட்ட ,ஒன்றிய நிர்வாகிகள்,கழக தோழர்கள் பொதுமக்கள் பெருந்திரளாக பங்கேற்றனர்.

### நாளை பிப்ரவரி 3, அண்ணா நினைவு நாள் !

# மேடையிலே மின்னும் அண்ணா நினைவுகள்!



அறிஞர் அண்ணா பேசிய மேடைகள், அரங்குகள் ஆயிரமாயிரம்! அந்த மேடையிலே வீசிய மெல்லிய பூங்காற்றின் மணமும், குணமும் இன்றும் மாறாமல் தவழுகின்றன!

சங்க காலத்திலே ஆராய்ச்சியின்
அரணாக விளங்கிய
தமிழ்நாடே எனினும், தத்துவங்கள்
எத்தனை தித்திக்கும்
இயல்பினதாயினும், துருவிப் பார்க்கும்
குணங்கொண்ட
தமிழ்நாடே எனினும், 'நெற்றிக்
கண்ணைக் காட்டினும்
குற்றம் குற்றமே' என்ற நக்கீரர்
வாழ்ந்த நாடே எனினும்,
வள்ளுவர் வாழ்ந்த தமிழ்நாடே
எனினும், இந்தப் பத்து
ஆண்டுகளாகப் பணியாற்றி வரும் சுயமரியாதை இயக்கத்
திற்கீடான முயற்சி, தமிழ்நாட்டிலே இதற்குமுன் தோன்றவே இல்லை;

என்று உறுதியிட்டு, பொது வாழ்வில் முதல் தலைமைப் பொழிவாக, ஓங்கி ஒலித்த அண்ணாவின் 28 வயது இளங்குரல், இன்னமும் துறையூர் மேடையின் இன்னமுத நினைவினில் துலங்குகிறது!

**நாம் பகுத்தறிவையே ஆயுதமாகக் கொண்டு, இந்திய**
**மத ஏகாதிபத்தியத்துடன் கடினமான போர் துவக்கினோம்.**
**நமது எதிரிகள், புராணங்களையும் பழைய பழக்க வழக்கங்**
**களையும் ஆயுதங்களாகக் கொண்டு நம்மைத் தாக்கினர். நாம்**
**மக்கள் சமூக வாழ்வில் ஒருவருக்கொருவர் எவ்வித உயர்வு**
**தாழ்வும் இருக்கக் கூடாது என்றோம். அவர்கள் உயர்வு தாழ்வு,**
**மத சாஸ்திர புராண இதிகாச ஆதாரம் பெற்று நெடுநாட்களாக**
**இந்த நாட்டிலே நிலவி, சக்கரவர்த்திகளாலும்**
**ஒப்புக் கொள்ளப்பட்டு, காப்பாற்றப்பட்டு வந்தது என்றனர். அறிவு,**
**ஆராய்ச்சி,அனுபவம் இவைகளையே உறுதுணையாகக்**
**கொண்டு சமூக வாழ்வை நடத்த வேண்டுமென்று நாம்**
**கூறினோம் - மனு சொன்னபடி நடப்பதே மதக் கட்டளை**
**என்றனர் அவர்கள்;**

என்று நாமக்கல்லில் அண்ணா அன்று காட்டிய நாநயம், பளிச்சென உணர்த்திய பகுத்தறிவுப் பண்பு நலன், குன்றின் மேலிட்ட விளக்காக நம் நினைவில், குறைவிலா வெளிச்சத்தைக் கொட்டிக்கொண்டே இருக்கிறது!

கலை, ஓர் இன மக்களின் மனப்பண்பு; இவ்வின மக்கள்
இடையே தோன்றும் தெளிவு, வீரம், ஆகியவற்றின் எடுத்துக்
காட்டு. எனவே, கலை இன வளர்ச்சிக்கு ஏற்றபடி மாறியும்
விரிந்தும் வரும் என்பதே நுண்ணறிவினரின் துணிபு.
கலை உலகில், அவ்வப்போது மாறுதல் உண்டாகும்.இனத்துக்கோர்
கலையும், இடத்தின் இயல்பு, தட்பவெப்பம் ஆகியவற்றுக்கு
ஏற்ற முறையிலும், கலை உண்டாகும், வளரும், மாறும்.
இந்தியா என்ற இந்த உப கண்டம், பல இனங்கள் வசிக்கும்
இடம். ஆகவே இங்கு பல கலைகள் உண்டு.இனத்திற்கோர்
கலை என்றுண்டு.எனினும், இரு பெரும் கலைகள் இங்கு
உள்ளன என்று அறிவாளிகள் கூறியுள்ளனர். ஆரியக் கலை
ஒன்று, திராவிடக் கலை பிறிதொன்று;

என்று, சென்னை சட்டக் கல்லூரி மண்டபத்தில் அண்ணா, கலைக்கு இலக்கணம் வகுத்ததையும், திராவிடக் கலையின் தனிப்பெருந்தன்மையினைத் தக்கபடி எடுத்துக் காட்டியதையும், கற்றறிவாளர் மறவாது நினைவில் வைத்து, களிபேருவகை கொள்வார் அன்றோ!

**திராவிடரின் விடுதலைப் படையிலே நாங்கள் பெயரைப் பொறித்துவிட்டோம்! எந்தச் சமயத்திலே அழைப்பு வருமோ அறியோம். வந்தால் வாளாயிரோம், அது மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை, நம்மை மாட்ட நினைக்கும் சிறைச்சாலையாக இருக்கக்கூடும்; எதுவாக இருக்குமோ தெரியாது! ஆனால் எதற்கும் நாங்கள் தயார் என்று உறுதி கூறிவிட்டோம்;**

என்று, திருச்சியிலே 75 ஆண்டுகளுக்கு முன்னர், அண்ணா எழுப்பிய இன்ப திராவிடப்போர்க்குரல், இன்னமும் மலைக்கோட்டை மறவாமல் எதிரொலிக்கிறது!

பாரதிதாசன், மேல்நாட்டுக் கவிகளைப் போல் கலையைக்
காலத்தின் கண்ணாடி ஆக்குகிறார்.காலத்தையே சிருஷ்டிக்
கிறார் என்பது மாத்திரமல்ல; காலத்தை மாற்றுகிறார்.
காலத்தை மாற்றுகிறார் என்பது மட்டுமல்ல; மாறிய
காலத்திற்கு நம்மை அழைத்துச் செல்கிறார்; அது மாத்திரம்
அல்ல, சமயம் கிடைத்தால் முன்னேயும் பிடித்துத் தள்ளுகிறார்.
தென்றல் வளரும், நிலவு வளரும், செல்வம் வளரும்.அவை
போல, அவரது கவிதைகளும் வளர வேண்டும்;

என்று, பாவேந்தரின் கவிதைகள் கால மாற்றத்திற்கான கருவிகள் என்பதை அண்ணா எடுத்துச் சொன்னதற்குப் பிறகு, பாவேந்தரைப் படித்தவர்கள் ஏராளம், ஏராளம்.அவர்களால் பாரதிதாசன் பரம்பரை என்ற ஒன்றே உருவாயிற்று. இன்றும் அது வளருகிறது.பாவேந்தரைப் படிக்கும்போதும், அவருடைய பரம்பரைப் பாவலர்களின் ஏடுகளைப் பார்க்கும்போதும், அண்ணாவின் நினைவு நெஞ்சத்திலே நிழலோவியமாக வளருவதைத் தடுத்திட இயலாது.

**ஏ தமிழ்நாடே! ஏ தாழ்ந்த தமிழ்நாடே! தேய்ந்த தமிழ்நாடே!**
**தன்னை மறந்த தமிழ்நாடே! தன்மானமற்ற தமிழ்நாடே! நன்றி**
**கெட்ட தமிழ்நாடே! கலையை உணராத தமிழ்நாடே! கடவுளின்**
**லட்சணத்தை அறியாத தமிழ்நாடே! மருளை மார்க்கத் துறை**
**என்றெண்ணிடும் தமிழ்நாடே! ஏ, சோர்வுற்ற தமிழ்நாடே! வீறு**
**கொண்டெழு! உண்மைக் கவிகளைப் போற்று! உணர்ச்சிக்**
**கவிகளைப் போற்று! புரட்சிக் கவிகளைப் போற்று!!**
**புத்துலகச் சிற்பிகளைப் போற்று!!!** ;

என்று, அறிஞர் அண்ணா அவர்கள் 1945ல் குமுறிக் கொள்கை முழங்கியதற்குப் பிறகுதான், நம் நாட்டில் சிந்தனைப் புதுவெள்ளம் சீறிப்பாய்ந்திடலாயிற்று.அதனால் அளப்பரிய பயனுற்றோர், பயனுற்றோரின் பண்பட்ட பாரம்பரியத்தினர் நினைவில் அண்ணா, நித்தமும் நிலவைப் போல முகிழ்க்கிறார்! அது மட்டுமல்ல, **'ஏ! தாழ்ந்த தமிழகமே!'** என்று அண்ணா முழங்கிய அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழா அரங்கம் இன்னமும் அந்தப் பெரு முழக்கத்தை நினைவில் ஏந்தி எதிரொலித்துக் கொண்டிருக்கிறது!

**சென்னை முதல் கன்னியாகுமரி வரை, பட்டினங்கள் முதல் பட்டிக் காடுகள்வரை, எத்தனையோ மேடைகள்! 'தொழுதூர் வந்தோம், பொழுது விடிந்தது' என்று அழகொழுகும் அற்புதத் தமிழில் எழுதுமளவுக்கு, இரவும் பகலும் அறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய அரிய உரைகள்! கரைகாணாக் கடல் போலே, அதில் ஆர்ப்பரிக்கும் அலைகள் போலே, காலத்தின் நினைவில் நிரந்தரமாக ஒலி எழுப்பிக்கொண்டே இருக்கின்றன!**

★★★

**கி.இராஜமாணிக்கம்**

★★★